**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**MCOP 243 /2023**

2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் நாள் செவ்வாய்கிழமை

ம.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. செல்வமணி Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | சங்கரலிங்கம் | த/பெ.: | காத்தான் |
| கிராமம்: | வரம்பியம் | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | கூலி வேலை |
| வயது: | 64 | முகவரி: | வரம்பியம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 21.01.2025

**முதல் விசாரணை:_**

நான் இந்த வழக்கில் மனுதாரரர் ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண பிரமான வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 20.01.2017 | முதல் தகவல் அறிக்கை | உண்மை நகல் |
| ம.சா.ஆ.2 | 26.01.2017 | டிச்சார்ஷ் சம்மரி | நகல் |
| ம.சா.ஆ.3 | 22.04.2016 | வாகனத்தின் RC Book | நகல் |
| ம.சா.ஆ.4 | 11.04.2016 | Insurance Policy | நகல் |
| ம.சா.ஆ.5 | 31.01.2017 | MV Report | உண்மை நகல் |
| ம.சா.ஆ.6 | | எனது பெயரிலுள்ள ஆதார் அட்டை | நகல் |

மனுப்படி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.

பக்கம் – 5 –

**1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

எனது வயது 65. எனது வயது குறித்து ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆதார் அட்டை தாக்கல் செய்துள்ளேன். எனக்கு வயது 80 என்றும், இந்த வழக்கிற்காக பொய்யாக 65 என சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது எத்தனை மகன்கள் என்றால் 2. இருவருக்கும் திருமணம் ஆகிவிட்டது. எனது மகன்களுக்கு குழந்தைகள் உள்ளது. எனக்கு பார்வை மங்களாக தெரிகிறது என்றால் சரிதான். என்னை எந்த வண்டி மோதியது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.எனக்கு சரியாக காது கேட்காது. இந்த விபத்தானது யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். எனக்கு வயது 80 என்றும், இந்த வழக்கிற்காக பொய்யாக 65 வயது என்றும், மாத வருமானம் ரூபாய்.15,000/– என சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் எல்லாம் இந்த வழக்கிற்காக மிகை படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சைக்கிள் ஓட்டி சென்ற போது தவறி கீழே விழுந்ததால் காயம் ஏற்பட்டது என்றும், அதை மறைத்து விபத்து ஏற்பட்டது போல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரயில்ல. எனது மாத வருமானம் ஈட்டியதற்கான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1ம் எதிர்மனுதாரர் எந்த வகையிலும் பொறுப்பாக மாட்டார் என்றால் சரியல்ல. விபத்திற்கு காரணம் நான்தான் என்றும், அதனால் 1ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

பக்கம் – 6 –

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.